முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி! அருட்பெருஞ்சோதி!! தனிப்பெருங்கருணை! அருட்பெருஞ்சோதி!!

ஆன்மீகத்தில் அரசியலையும், அரசியலில் ஆன்மீகத்தையும் கரை கண்டவர் முருகப்பெருமான்

எதிர்காலம் குறித்த இந்தியா, தமிழகத்தில் இந்த வார நிகழ்வாக எதிர்கால பலன் குறித்த மகான் அகத்தியர் அருளிய வார ஆசி நூல்

சோபகிருது வருடம் ஆவணி மாதம் 31 திகதி முதல்
சோபகிருது வருடம் புரட்டாசி மாதம் 07 திகதி வரை
(17.09.2023 ஞாயிறு முதல் 24.09.2023 ஞாயிறு வரை)

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

1. பழமைகள் நிறைந்த பாரதமே
பண்புகள் நிறைந்த தமிழகமே
வளம் செறிந்த இயற்கை பலத்தை
வரமாகக் கொண்ட இந்தியா தமிழகத்தின்
2. தமிழகத்தின் எதிர்கால பலனாக
தக்க சோபகிருது யாளி திங்கள் முப்பானோர் திகதி மேல்
நேமமுடன் நங்கைதிங்கள் சப்தம திகதி வரை
நடக்கும் வார நிகழ்வாக ஆசிதனை
3. ஆசிதனை அகத்திய மகரிஷியும்
அரங்க ஞானி கேட்க அருள்வேன்
வாசிவென்ற ஞானிகள் எல்லாம்
வதையான சமூகச் சீர்கேடுகளை
4. சீர்கேடுகளை அழிக்கும் விதமாக
சித்தம் தெளிவிக்கும் ஞானமாக
பார்த்துரைத்தும் ஏற்கா மக்கள்
பாவ வினை வழி உழலுகின்றாரப்பா
5. அப்பனே கருமவினை அகல
அரசியல் களம் போதாதப்பா
ஒப்புக் கொண்டு மானுடங்கள்
உயர்வான குருமார்க்கம் தேடி

6. தேடிக் கண்டு சரணாகதிபட
தொடர வேண்டும் உண்மை வழியை
வாடிக் கிடக்கும் இன ஒற்றுமை
வளர்ச்சிப் பணிகள் அத்தனையும்
7. அத்தனையும் தயவே வடிவான
அன்பர்களாக மக்கள் மாறி
சத்திய வழியில் சொல் செயல்
சகல நடைகளும் இருந்தால்தான்
8. இருந்தால் எல்லாம் சமமெனும்
ஏகாந்த கதி நிலை வரும்
வருந்த நடக்கும் முறைகேடுகள்
வதைக்கும் ஆட்சி முறைகள் அனைத்தையும்
9. அனைத்தையும் திருத்தினாலே போதும்
ஆசாபாச சுயநலமுள்ள வெறி
அனைத்தும் அடங்கி அகன்றுமே
ஆற்றல் மிக்க ஞானபூமியாக மாறும்
10.மாறுதலை செய்யும் வண்ணம்
மகான் அரங்கன் அவதாரமிருக்க
ஆறுதல் தந்து மக்கள் வர
அகிலம் வியக்க இந்தியா தமிழகம் உயரும்
வார ஆசி முற்றே

–சுபம்–

முருகப்பெருமான் துணை

மகான் அகத்திய மகரிஷி அருளிய வார ஆசி நூலின் சாரம் :

சோபகிருது வருடம் ஆவணி மாதம் 31ம் நாள் 17.09.2023 ஞாயிற்றுக்கிழமை முதல் புரட்டாசி மாதம் 07ம் நாள் 24.09.2023 ஞாயிற்றுக்கிழமை வரை உள்ள காலத்தில் நிகழவிருக்கும் நிகழ்வுகள் :

பழம் பெருமை மிக்க பாரத தேசமே பண்பு மிக்க தமிழகமே இயற்கை வளம் மிகுந்த பாரத தேசத்திலே சோபகிருது வருடம் ஆவணி மாதம் 31ம் நாள் 17.09.2023 ஞாயிற்றுக்கிழமை முதல் புரட்டாசி மாதம் 07ம் நாள் 24.09.2023 ஞாயிற்றுக்கிழமை வரை நிகழவிருக்கும் நிகழ்வுகளை வார ஆசி நூலாக

அகத்திய மகரிஷி யானும் ஆறுமுக அரங்க மகா தேசிகர் கேட்க உரைக்கின்றேன் என்கிறார் மகான் அகத்திய மகரிஷி.

வாசியை வென்று முற்றுப் பெற்றிட்ட வல்லமை பொருந்திய ஞானிகள் ஒன்றுகூடி மக்களை அழிவிற்கு கொண்டு செல்லும் சமூக சீர்கேடுகளை எல்லாம் அழித்து மக்களை காக்கும் விதமாக அறிவினில் மயங்கி மாயையுள் ஆட்பட்ட மக்களை தெளிவிக்கும் விதமாக உண்மை ஞானம்தனை உலகிற்கு எளிமையான முறையில் தயவுடன் கூடிய தூய சன்மார்க்க நெறியாக ஓங்கி உரைத்தும் மயக்கத்துள் ஆழ்ந்து ஞானநெறிதனை ஏற்காமல் பாவ வினை வழி உழலுகின்றாரப்பா.

மக்களே உங்களது கர்ம வினைகள் எல்லாம் உங்களை விட்டு அகன்று மேன்மை பெற அரசியல் மட்டும் போதாதப்பா. ஆதலினாலே மக்களே அகத்தியன்யான் கூறும் வார்த்தைகள் மீது நம்பிக்கை கொண்டு உண்மை ஞானம் கூறும் ஞானகுருமார்க்கத்தினை தேடி கண்டு உண்மை ஞான குருவின் திருவடிகளிலே சரணடைந்து அவர் தம் உபதேசங்களை உளமார ஏற்று வாழ்வில் கடைப்பிடித்திட வேண்டுமப்பா.

பேதாபேதங்களை மறந்து மனித இனம் ஒற்றுமையுடன் நடப்பதுடன் மனித சமுதாய வளர்ச்சிக்கான அத்தனை திட்டங்களையும், செயல்பாடுகளையும் செய்து தயவும், அன்பும் மிக்க அன்பர்களாக மக்கள் மாறி சத்தியத்தின் வழியில் சொல் செயல் என அனைத்திலும் சத்தியத்தை கடைப்பிடித்து வர வேண்டுமப்பா.

சத்தியத்தின் வழியில் சென்றால்தான் உலக மக்கள் அனைவரும் சமம் எனும் ஒருமைப்பாட்டு உணர்வும் சமநிலையும் உண்டாகும் மக்களை வருத்தும் முறைகேடுகள் மக்களை வதைக்கும் ஆட்சி முறைகள் அனைத்தையும் திருத்திட முடியுமப்பா. திருந்தினாலே போதுமப்பா ஆசாபாசங்கள் குறைந்து சுயநல வெறியும் குறைந்து அனைத்துவித முரண்பாடுகளும் அகன்று இந்த தேசம் ஞான பூமியாக மாறுமப்பா.

உலகினில் மாற்றங்களை உண்டாக்கி ஞான ஆட்சி உருவாக்கிடவே முருகப்பெருமானின் சக்தி வடிவமாக ஆறுமுக அரங்க மகா தேசிகர் அவதாரம் நிகழ்த்தி இருக்கின்றதாலே அண்ணல் அரங்க மகானை நாடிச் சென்று உண்மை ஞானம்தனை அடைந்து கடைப்பிடித்திட்டால் உலகமே வியக்குமாறு இந்தியா தமிழகம் தலைநிமிர்ந்து நிற்குமப்பா எனக் கூறுகிறார் மகான் அகத்திய மகரிஷி.

–சுபம்–